இருக்கின்றன. ஆகவே தான் அவரால் இயக்க முடியாத காரணத்தால் இப்போது டெப்போவில் அவருக்கு அந்தப் பணிகளைச் செய்யச் சொல்லி நாங்கள் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் பெண் சிசு பாதுகாப்புத் திட்டம்; 2 பெண் குழந்தைகள் பிறந்தால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கு சலுகைகள்; தொடக்கப் பள்ளியில் ஒன்றிலிருந்து 5 வகுப்பு வரை பெண் ஆசிரியர்களை நியமித்தல்; அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தல்; இப்படி பெண்களுக்காகவே நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் நகர பேருந்துகளில் மட்டுமாவது மகளிர் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்தை ஓட்டுவது தான் கடினம். அடிக்கடி நிறுத்த வேண்டும்; அடிக்கடி கியர்களை மாற்ற வேண்டும்; அடிக்கடி மக்களால் இடர்பாடுகள் வருகிறபோது அந்த இடர்பாடுகளில் இங்கே அந்தப் பேருந்துகளை இயக்குவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதைப்போல நகரப் பேருந்துகளில் பெண்கள் சென்று ஆண்கள் அங்கே இருக்கின்றபோது, நூற்றுக்கணக்கான ஆண்கள் ஸ்டாண்டிங்கில் அங்கே நின்று கொண்டு இருக்கிறபோது அதிலே அவர்களிடத்திலே சென்று டிக்கெட் வழங்குவது அவ்வளவு சரியான சாத்தியக் கூறுகளாக இருக்காது. ஆகவே நகரப் பேருந்துகளில் மற்றும் புற நகர் பேருந்துகளில் பெண்களை வைத்து இயக்குவது அவ்வளவு சாத்திய கூறுகளாக இல்லை.தனியாகவே பெண்களுக்காகவே முழு நேரமாக பேருந்துகளை இயக்குகின்ற காலத்தில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 346, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

346—

சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து இயக்குதல்

***37369—**திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 19]

சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து இரயில் நிலையத்திற்கு இரயில் வரும் நேரங்களில் நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அவசியம் எழவில்லை.

முற்பகல் 10-30

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சிவகாசியைப் பொறுத்த மட்டிலும், சென்னைக்கும் மற்றும் இதர வட இந்தியாவிற்கும் செல்வதற்கு அதிக அளவிலே மக்கள் ரெயிலிலே பயணம் செய்யக் கூடிய ஒரு நிலை இருந்து வருகின்றது. காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் மட்டும்தான் அங்கே ரெயில்கள் வருகின்றன. நெல்லை எக்ஸ்பிரஸ் மற்றும் கொல்லம் எக்ஸ்பிரஸ் ஆகிய இரண்டு ரெயில்கள் அங்கே வருகின்றன. அப்போது கிட்டத்தட்ட ஆயிரம் பயணிகளுக்கு மேலாக அந்த இரண்டு ரெயில்களிலிருந்து வரும்போது பேருந்து வசதியில்லாமல் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும் பேருந்து நிலையம் ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கின்ற காரணத்தால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது ஒரு நகரப் பேருந்தை காலையிலும் மாலையிலுமாவது இயக்க ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நியாயமான கேள்விதான். ஆனால் ரெயில்கள் குறிப்பிட்ட நேரத்திலே அங்கே வருவதில்லை. காலையிலும் மாலையிலும் பேருந்தை இயக்கினாலும்கூட, ரெயில்கள் இரண்டு மணி நேரம், நான்கு மணி நேரம், எட்டு மணி நேரம் தாமதமாக வருகிறபோது அந்த ரெயில்களிலே வருகின்றவர்களுக்கு அது சாத்தியமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்லீஸ்ட் மினிபஸ்ஸையாவது இயக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ரெயில்கள் அரைமணி நேரம், கால்மணி நேரம் தாமதமாக வந்தாலும், அந்த ரெயில்களிலே வருகின்ற பயணிகள் வசதிக்காக மினி பஸ்ஸையாவது இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கருணைகூர்ந்து முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.